BRIEFING NOTE

# பொது உட்கட்டமைப்பிற்கான நிதியைப் பெறுவதில் தவிர்க்கப்படும் போட்டி ஏலம்

பெறப்பட்ட நிதியில்
மூன்றில் ஒரு பங்கு சலுகையற்றவை

ஜூன் 2023



Verité Research
Strategic Analysis for Asia

# பொது உட்கட்டமைப்பிற்கான நிதியைப் பெறுவதில் தவிர்க்கப்படும் போட்டி ஏலம்

பெறப்பட்ட நிதியில் மூன்றில் ஒரு பங்கு சலுகையற்றவை

ஜூன் 2023

இந்த ஆய்வை வெரிட்டே ரிசர்ச்சின் பொருளாதாரம் மற்றும் சட்ட ஆராய்ச்சிக் குழுக்கள் தொகுத்துள்ளன. இந்தக் குழுவில் மதீஷ அரங்கல மற்றும் அரனி ஹெய்யன்துடுவ ஆகியோர் அடங்குவர். ஒட்டுமொத்த ஆய்வு உதவி சுபாஷினி அபேசிங்கவால் வழங்கப்பட்டுள்ளது. ஆசிரிய உதவியை மாலதி நைட் மற்றும் வென்யா டி சில்வா வழங்கியுள்ளனர்.

# அறிமுகம்

இலங்கை குறைந்த நடுத்தர வருமானம் கொண்ட நிலைக்குத் தள்ளப்பட்டதுடன் பாரம்பரிய சலுகைகளைக் கொண்ட நிதி மூலங்களுக்கான அணுகல் குறைந்து வருவதால், 2009 ஆம் ஆண்டில் சுமார் மூன்று தசாப்த கால சிவில் யுத்தம் முடிவுக்கு வந்ததைத் தொடர்ந்து அதிகரித்துவரும் உட்கட்டமைப்புத் தேவைகளுக்கு நிதியளிப்பதற்கான புதிய வழிகளை அரசாங்கம் நாடியள்ளது. அந்த சமயத்தில் ஏற்றுமதி கொடுகடன் கருவிகள் நிதியளிப்பிற்கான முக்கிய மாற்று மூலமாக வெளிப்பட்டன. எனினும் ஒப்பந்ததாரர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு போட்டி ஏல செயல்முறையிலிருந்து விலக வேண்டிய தேவையை இவை ஏற்படுத்தின. மேலும் கடன் வழங்கும் நாட்டின் ஒப்பந்ததாரரிடமிருந்து கோரப்படாத முன்மொழிவுகளாக உருவான திட்டங்களுக்கு அவர்கள் நிதியளித்தனர். அத்துடன் கடன் வழங்கும் நாட்டிலிருந்தே ஒப்பந்ததாரரைத் தேர்வு செய்வது உட்பட பொருட்கள் மற்றும் சேவைகளை கடன் பெறுனர் அந்த நாட்டிலிருந்தே கொள்வனவு செய்ய வேண்டியுள்ளது. எனினும் 2006 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட இலங்கையின் அரச பெறுகை கட்டமைப்பு போட்டி ஏலத்தை ஆதரிப்பதோடு கோரப்படாத முன்மொழிவுகளுக்கு இடமளிப்பதற்கான ஏற்பாடுகள் அதில் இல்லை. அத்துடன் போட்டி ஏலச் செயல்முறையிலிருந்து விலகிச் செல்வதற்கு விதிவிலக்கான சந்தர்ப்பங்களில் மட்டும் அமைச்சரவை ஒப்புதல் மூலம் அனுமதிக்கிறது.

இந்தச் சிக்கலைத் தீர்ப்பதற்கு, 2010 ஆம் ஆண்டில் கொள்முதல் செயல்முறைகளில் இருந்து விலகிச் செல்வதை அனுமதிக்கும் விசேட கட்டமைப்பை உருவாக்கும் வகையில் 2006 ஆம் ஆண்டின் நாட்டின் கொள்முதல் வழிகாட்டுதல்களில் திருத்தத்தை மேற்கொள்ள இலங்கை அமைச்சரவை அனுமதியளித்தது. இந்தப் புதிய கட்டமைப்பு ஒப்பந்ததாரர்களைத் தேர்ந்தெடுக்கும்போது போட்டி ஏலச் செயல்முறையில் இருந்து விலகிச் செல்ல கொள்முதல் நிறுவனங்களுக்கு அனுமதியளித்தது. இந்தக் கட்டமைப்பு கோரப்படாத முன்மொழிவுகளை மீளாய்வு செய்யவும் நிலையான போட்டி கொள்முதல் செயல்முறையைத் தாண்டி திட்டங்களைத் தொடரலாமா வேண்டாமா என்பதை அமைச்சர்களுக்குப் பரிந்துரைக்கும் பணியையும் அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட நிலையான மீளாய்வுக் குழுவுக்கு (SCARC) ஒதுக்கியது[1]. இந்தப் புதிய கட்டமைப்பு 2010 ஆகஸ்ட் மாதம் செயல்பாட்டுக்கு வந்தது. கோரப்படாத/தனிப்பட்ட முன்மொழிவுகளை (Unsolicited/Standalone Proposals - USPs) செயல்படுத்துவதற்கான வழிகாட்டுதல்கள் கொள்முதல் வழிகாட்டுதல்களுக்கான பின்னிணைப்பு

---

[1] *அரச நிதி திணைக்களம், "கொள்முதல் வழிகாட்டுதல்கள் பிரிவு IIக்கான பின்னிணைப்பு 23: 237" (2011), https://www.treasury.gov.lk/api/file/5c891efb-a1cb-4098-aba5-4d4360a5cedb [இறுதியாக அணுகியது: 16 மே2022], முன்னுரை.*

23[2] இன் மூலம் 2011 மே மாதம் வெளியிடப்பட்டது. SCARC 2010 முதல் 2016 ஆம் ஆண்டு வரை செயற்பட்டது. 2016 டிசம்பரில் கொள்முதல் வழிகாட்டுதல்களுக்கான பின்னிணைப்பு 30 மூலம் இது இரத்துச் செய்யப்பட்டது[3].

போட்டி ஏலத்தைத் தவிர்த்து விசேட கட்டமைப்பின் மூலம் பெறப்பட்ட நிதியின் சலுகை மட்டத்தை அளவிடுவதே இந்த அறிக்கையின் நோக்கமாகும். சலுகையின் இரண்டு அளவீடுகளைப் பயன்படுத்துவதன் மூலம் இது முன்னெடுக்கப்படுகிறது. முதலாவது, 2010 ஆம் ஆண்டின் விசேட கட்டமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள அளவுகோல், மாற்று நிதி மூலத்துடன் ஒப்பிடும்போது பெறப்படும் நிதி சாதகமானதா என்பதைத் தீர்மானிக்கிறது. இரண்டாவது, கடனின் சலுகையை மதிப்பிடுவதற்கு சர்வதேச நாணய நிதியம் போன்ற சர்வதேச அமைப்புகளால் பயன்படுத்தப்படும் அளவுகோல்.

வெரிட்டே ரிசர்ச் தாக்கல் செய்த தகவல் அறியும் உரிமைக் கோரிக்கைக்கு (RTI) அரச நிதித் திணைக்களம் வழங்கிய பதிலின் அடிப்படையில் இந்தப் பகுப்பாய்வு முன்னெடுக்கப்பட்டுள்ளது. இந்த ஆய்வில் பயன்படுத்தப்பட்ட மாற்று நிதி மூலம் இந்தக் காலப்பகுதியில் இலங்கையால் விநியோகிக்கப்பட்ட நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் சராசரி கடன் விகிதம் ஆகும்.

SCARC ஆல் ஒப்புதல் அளிக்கப்பட்ட 48 திட்டங்களில் 20 திட்டங்களை பொதுத் துறை நிதியளிக்கப்பட்ட அபிவிருத்தி கருத்திட்டங்களாக வெரிட்டே அடையாளம் கண்டுள்ளது. இரண்டு கருத்திட்டங்களுக்கு விரிவான கடன் தகவல் கிடைக்கவில்லை. ஆகவே இந்தப் பகுப்பாய்வு ஐ.அ.டொலர் 3,416 மில்லியன் பெறுமதியான 21 கடன்கள் மூலம் நிதியளிக்கப்பட்ட 18 கருத்திட்டங்கள் தொடர்பில் மட்டுமே கவனத்தில் கொள்கிறது. (SCARC ஆல் அனுமதியளிக்கப்பட்ட 48 கருத்திட்டங்களின் பட்டியலுக்கு பின்னிணைப்பு 1 ஐப் பார்க்கவும்).

---

[2] *அரசாங்கத்தின் டென்டர் நடைமுறை வழிகாட்டுதல்களுக்கான பின்னிணைப்பு 30 – பிரிவு II (டிசம்பர் 2016), பார்வையிட: https://www.treasury.gov.lk/api/file/040fa3ab-2f79-4c7b-89ce-dfc48e550999, [இறுதியாக அணுகியது: 16 மே 2022].*

[3] *இந்த விசேட கட்டமைப்பு தொடர்பான மேலதிகத் தகவல்களுக்கு வெரிட்டே ரிசேர்ச்சின் முந்தைய வெளியீட்டைப் பார்க்கவும்: வெரிட்டே ரிசேர்ச், 'சீனக் கடன்கள் மீதான மோகம்', 2022, பார்வையிட: https://www.veriteresearch.org/publication/the-lure-of-chinese-loans/, [இறுதியாக அணுகியது: 15 ஜூன் 2023].*

# கண்டுபிடிப்புகள்

சாதகமான விதிமுறைகளில் நிதியைப் பெறுவதற்காக, கொள்முதல்களில் போட்டி ஏலத்தைத் தவிர்க்கும் இலங்கையின் முயற்சியில் பின்வரும் அவதானிப்புகள் மற்றும் தாக்கங்களைப் பகுப்பாய்வு கண்டறிகிறது:

1) போட்டி ஏலத்தைக் கைவிட்டு பெறப்பட்ட கடன்களில் அநேகமானவை (91%) சீனாவிலுள்ள கடன் வழங்கும் நிறுவனங்களிடம் இருந்து பெறப்பட்டவை. எனினும் கோரப்படாத முன்மொழிவுகளாக உருவான திட்டங்களுக்கு சீனா மாத்திரம் நிதியளிக்கவில்லை. SCARC ஆல் பெறப்பட்ட மீதமுள்ள நிதிகள் ஆறு அபிவிருத்தியடைந்த நாடுகளில் இருந்து பெறப்பட்டுள்ளன.
2) போட்டி ஏலத்தைத் தவிர்த்து ஒப்பந்தங்களை வழங்குவது நாட்டிற்கு நன்மையானதா என்பதைத் தீர்மானிப்பதற்காக கோரப்படாத முன்மொழிவை மேம்படுத்துவதற்காக SCARC உருவாக்கப்பட்டது. எனினும் கடனின் பொருத்தத்தைத் தீர்மானிப்பதற்கான SCARC இன் மதிப்பீட்டு அளவுகோல்கள் பலவீனமானவை. மேலும் நடைமுறையில் SCARC தன்னுடைய சொந்த வழிகாட்டுதல்களையும் கடன் சலுகையை மதிப்பிடுவதற்காக உருவாக்கப்பட்ட சர்வதேச அளவுகோல்களையும் அடிக்கடி புறக்கணித்துள்ளது.

    அ) போட்டி ஏலத்தைத் தவிர்த்து SCARC ஆல் பெறப்பட்ட எட்டு கடன்கள் 2010 ஆம் ஆண்டின் விசேட கட்டமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள குறைந்தபட்ச அளவுகோல்களைக் கூட பூர்த்திசெய்யவில்லை. இந்தக் கடன்கள் நெதர்லாந்து, பெல்ஜியம், ஸ்பெயின் மற்றும் ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளிலிருந்து பெறப்பட்டுள்ளன.

    ஆ) போட்டி ஏலத்தைத் தவிர்த்து SCARC ஆல் பெறப்பட்ட நிதியின் 30% பெறுமதியைக் கொண்ட 11 கடன்கள் சலுகை தொடர்பான சர்வதேச அளவுகோல்களை எட்டவில்லை. இதில் சீனாவிடம் இருந்து பெறப்பட்ட 3 கடன்களும் மேலே குறிப்பிடப்பட்ட எட்டு கடன்களும் அடங்கும்.

3) கொள்முதலில் போட்டி ஏலத்தைத் தவிர்ப்பதால் உட்கட்டமைப்பு கருத்திட்டங்களுக்கான செலவு அதிகரிக்கும் அபாயம் உள்ளது. பொது மக்களின் பணம் சரியாகச் செலவிடப்படுகிறது என்பதை உறுதிப்படுத்த பொது உட்கட்டமைப்பு கொள்முதல் செயல்முறை போட்டிக் கொள்கையை சிறந்த முறையில் நிலை நிறுத்த வேண்டும். போட்டி இல்லாததன் காரணமாக ஏற்படும் செலவு அதிகரிப்பு கடனின் சலுகை அளவு (மானியம் மூலம் அளவிடப்படுகிறது) அதிகமாக இருந்தால் நியாயப்படுத்தப்படலாம். எனினும் SCARC ஆல் அனுமதிக்கப்பட்ட சில கடன்களின் குறைந்த சலுகை அளவு (உதாரணமாக, 10 சதவீதத்திற்கும் கீழ்) போட்டி ஏலத்தைத் தவிர்த்து

கடன்களைப் பெறுவதற்குப் பதிலாக வர்த்தக விகிதத்தில் கடன் பெறுவது மற்றும் போட்டி ஏலங்களுக்குச் செல்வது நாட்டிற்கு நன்மையானது என்பதைப் பரிந்துரைக்கிறது.

உட்கட்டமைப்பு கொள்முதல்களில் காணப்படும் ஊழல் மற்றும் மோசமான நிர்வாகம் பல காலமாக பொது மக்களின் முக்கிய கவலையாக உள்ளது. அண்மையில் கைச்சாத்திடப்பட்ட சர்வதேச நாணய நிதியத் (IMF) திட்டமும் நாட்டை வளர்ச்சிப் பாதைக்குக் கொண்டு செல்ல நிர்வாகத்தைச் சரிசெய்வது முக்கியமானது என்பதைச் சுட்டிக்காட்டியுள்ளது. இந்த ஆய்வில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது போன்று பொது நிதியை தவறாகப் பயன்படுத்துவற்கான சாத்தியத்தைத் தடுப்பதற்கு, கொள்முதல் செயல்முறையில் உள்ள இந்த இரண்டு குறைபாடுகளைச் சரிசெய்ய வேண்டும். முதலாவது, போட்டி ஏலத்தில் இருந்து விலகிச் சென்று கொள்முதல் வழிகாட்டுதல்களை மீறி பாராளுமன்றத்தின் மேற்பார்வையின்றி விசேட கட்டமைப்புகளை அறிமுகம் செய்வதற்கு அமைச்சரவைக்கு உள்ள அதிகாரம். இரண்டாவது, எந்தவொரு பாதகமான விளைவுகளையும் சந்திக்காமல் நிர்வாகக் கட்டமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள குறைந்தபட்ச அளவுகோல்களைக் கூட பூர்த்தி செய்யாத கருத்திட்டங்களை அனுமதியளிப்பதற்கான நியமனக் குழுவின் அதிகாரம்.

# ஆய்வு முன்னோட்டம்

கோரப்படாத முன்மொழிவுகளை ஆதரித்தது சீனக் கடன் வழங்கும் நிறுவனங்கள் மட்டும் அல்ல

18 பொதுத் துறை அபிவிருத்தி கருத்திட்டங்களில் எட்டு திட்டங்கள் சீன கடன் வழங்கும் நிறுவனங்களால் வழங்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 10 கருத்திட்டங்களுக்கான நிதி ஆறு அபிவிருத்தி அடைந்த நாடுகளால் வழங்கப்பட்டுள்ளன என்பதை இந்த ஆய்வு வெளிப்படுத்துகிறது.

சீனக் கடன் வழங்கும் நிறுவனங்களால் வழங்கப்பட்ட கருத்திட்டங்களில் ஐந்து திட்டங்களுக்கு சீனாவின் ஏற்றுமதி இறக்குமதி வங்கியும் (எக்ஸிம் சீனா) மூன்றுக்கு சீன அபிவிருத்தி வங்கியும் நிதியளித்துள்ளன. சீன கடன் வழங்கும் நிறுவனங்கள் அல்லாத அமைப்புகளால் வழங்கப்பட்ட கருத்திட்டங்களில், நான்கு ஆஸ்திரியாவைச் சேர்ந்த கடன் வழங்கும் நிறுவனங்களாலும் இரண்டு பெல்ஜியன் நிறுவனங்களாலும் மற்றைய கருத்திட்டங்கள் ஒவ்வொன்றும் ஸ்பெயின், நெதர்லாந்து, ஆஸ்திரேலியா மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகளின் கடன் வழங்கும் நிறுவனங்களால் வழங்கப்பட்டுள்ளன.

சீனக் கடன் வழங்கும் நிறுவனங்களால் நிதியளிக்கப்பட்ட திட்டங்களின் அளவு ஏனையவற்றுடன் ஒப்பிடும்போது மிக அதிகமாகத் தெரியும். இந்த 18 கருத்திட்டங்களுக்காகப் பெறப்பட்ட மொத்த நிதி ஐ.அ.டொலர் 3,416 மில்லியனாக உள்ள அதேவேளை, சீனாவால் நிதியளிக்கப்பட்ட எட்டு கருத்திட்டங்களுக்கான நிதி இந்தப் பெறுமதியின் 91 சதவீதமாகும். மீதமுள்ள 9% ஆறு நாடுகளின் கடன் வழங்கும் நிறுவனங்களிடம் இருந்து 10 கருத்திட்டங்களுக்காகப் பெறப்பட்ட நிதியாகும்.

போட்டி ஏலத்தைத் தவிர்த்து பெறப்பட்ட கடன்கள் அதிகமாக சீன நிறுவனங்களிடம் இருந்து பெறப்பட்டுள்ளதுடன் (91%) கோரப்படாத முன்மொழிவுகளாகப் பெறப்பட்டவை அவை மட்டுமே அல்ல என்பதை இந்தக் கண்டுபிடிப்புகள் சுட்டிக்காட்டுகின்றன.

கோரப்படாத முன்மொழிவுகளின் மதிப்பீட்டில் சலுகையற்ற கடன்களைக் களைவதற்கு விசேட கட்டமைப்பு தவறிவிட்டது

அரச நிதி சுற்றறிக்கை 444 இன் பிரகாரம், SCARC ஐ உருவாக்கி அதன் மூலம் போட்டி ஏலத்தைத் தவிர்த்து USPகளைச் சமர்ப்பித்த நிறுவனங்களுக்கு ஒப்பந்தங்களை வழங்குவது அவற்றுடன் தொடர்புடைய கடன்களின் அதிக சலுகைகள் மூலம் நன்மைகளைப் பெற்றுக்கொள்வதற்கு ஆகும். எனினும் கடன்கள் சலுகைகளைக் கொண்டனவா இல்லையா என்பதைத் தீர்மானிப்பதற்கு விசேட கட்டமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தரநிலைகள் சிறப்பானவை அல்ல.

பின்னிணைப்பு 23 இன் பிரிவு (உ) இன் பிரகாரம், பின்வரும் இரண்டு நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட்டால் மட்டுமே கடன் பொருத்தமானது என SCARC ஆல் தீர்மானிக்க முடியும்: 1) குறைந்தபட்ச மீள்கொடுப்பனவு/முதிர்வு காலம் 15 ஆண்டுகள் 2) குறைந்தபட்ச சலுகைக் காலம் 3 ஆண்டுகள்[4].

எனினும் கடனின் சலுகையை முதிர்வு காலம், சலுகைக் காலம் ஆகியவற்றின் அடிப்படையில் மட்டும் தீர்மானிக்க முடியாது. கடனின் சலுகையை மதிப்பிடுவதற்காக உலகளவில் புரிந்துகொள்ளப்பட்ட முறை மானியக் கூறு ஆகும். கடனின் பெயரளவு பெறுமதி (முகப்புப் பெறுமதி) மற்றும் கடன் வாங்கியவரால் திருப்பிச் செலுத்தப்பட வேண்டிய எதிர்கால கடன் சேவைக் கொடுப்பனவுகளின் மொத்தம் (நடப்பு பெறுமதி) ஆகியவற்றுக்கு இடையிலான வித்தியாசம் மானியம் என வரையறுக்கப்படுகிறது. இது கடனின் பெயரளவு பெறுமதியின் சதவீதமாகக் குறிப்பிடப்படுகிறது. சலுகைக் கடன் என்பது இந்த மானியக் கூறு நேர்மறையாக இருப்பதாகும். நேர்மறையான மானியக் கூறு என்பது கடனுக்கான சேவைக் கொடுப்பனவுச் செலவு அதே பெறுமதியைக் கொண்ட வர்த்தகக் கடனிற்கான சேவைக் கொடுப்பனவை விடக் குறைவு என்பதைக் குறிக்கிறது. சர்வதேச நாணய நிதியத்தின் பிரகாரம், சலுகைக் கடன் எனக் கருதப்படுவதற்கு ஒரு கடனின் மானியக் கூறு 35% எனும் அளவுகோலை விட அதிகமாக இருக்க வேண்டும்.

எனவே, கடனின் பொருத்தத்தைத் தீர்மானிப்பதற்கு, கடன் வாங்குவதற்கான செலவு அல்லது மானியக் கூறை கவனத்தில் கொள்ளத் தவறியமை SCARC கட்டமைப்பின் முக்கிய குறையாகும். போட்டி இன்மையால் கருத்திட்ட செலவுகள் அதிகரிப்பதைச் சமாளிப்பதற்கு ஒரு நாட்டின் திறனைப் புரிந்துகொள்ள மானியக் கூறை கணக்கிடுவது முக்கியமாகும். குறிப்பாக கோரப்படாத முன்மொழிவுகளில் செலவுகள் அதிகரிப்பது அதிகமாக உள்ளது[5]. மானியக் கூறு அதிகரிக்கும்போது செலவுகள் அதிகரிப்பதை ஈடுசெய்யும் திறன் அதிகரிக்கும். உதாரணமாக, ஒரு கடனுக்கு 10% மானியக் கூறு இருந்தால், மதிப்பிடப்பட்ட மொத்தச் செலவுடன் ஒப்பிடும்போது கருத்திட்ட செலவு 10 சதவீதத்திற்கும் மேல் அதிகரித்தால் அந்தக் கடன் சலுகையற்றதாக மாறுகிறது. அவ்வாறான சந்தர்ப்பங்களில் சந்தை விகிதங்களில்

---

[4] *அரச நிதி திணைக்களம், "கொள்முதல் வழிகாட்டுதல்கள் பிரிவு IIக்கான பின்னிணைப்பு 23: 237"(2011), பார்வையிட: https://www.treasury.gov.lk/api/file/5c891efb-a1cb-4098-aba5-4d4360a5cedb [இறுதியாக அணுகியது: 16 மே 2022], பத்தி 3.3.*

[5] *OECD இன் ஆய்வில் இத்தகைய நிபந்தனைகளுடனான கடன்கள் அபிவிருத்தித் திட்டத்தின் செலவினத்தை 15 முதல் 30 சதவீதத்தால் அதிகரிக்கும் எனக் கண்டறியப்பட்டுள்ளது. (கெட்ரினஸ் ஜே. ஜெப்மா - OECD 'நிபந்தனைகளுடனான உதவி', 1991, பக்கம்: 15, பார்வையிட https://www.oecd.org/dev/pgd/29412505.pdf, [இறுதியாக அணுகியது: 22 ஜுன் 2020].*

நிதியைப் பெற முடியுமானால் ஒரு நாடு வர்த்தகக் கடன்களைப் பெறுவதுடன் சர்வதேச போட்டி ஏலத்திற்கு அழைப்பு விடுக்கலாம்[6].

இந்த ஆய்வில் கவனத்தில் கொள்ளப்படும் 18 கருத்திட்டங்களுக்காக பெறப்பட்ட 21 கடன்களின் சலுகையை மதிப்பிட இந்தப் பகுப்பாய்வு பயன்படுத்தப்பட்டது. கடன்களின் காலத்தின் அடிப்படையில் SCARC பயன்படுத்தும் தரநிலைகள் மற்றும் மானியக் கூறை அடிப்படையாகக் கொண்ட சலுகைக்கான சர்வதேச தரநிலைகள் ஆகிய இரண்டையும் இவை எட்டுகின்றனவா என மதிப்பிடப்பட்டது.

இந்த 21 கடன்களின் மானியக் கூறை மதிப்பிடுவதற்கு, பரிசீலனையில் உள்ள இந்தக் காலப்பகுதியில் இலங்கை கடன் வாங்கக்கூடிய வர்த்தக விகிதமான 6.5% பயன்படுத்தப்பட்டுள்ளது. சர்வதேச தரநிலைகளின் அடிப்படையில் 11 கடன்கள் சலுகையற்றவை என கணக்கீடுகள் வெளிப்படுத்தியுள்ளன. அதாவது இந்தக் கடன்களின் மானியக் கூறு 35 சதவீதத்தை விடக் குறைவாகும். இந்த 11 கடன்களும் ஐ.அ.டொலர் 1 பில்லியனை விட அதிக பெறுமதியக் கொண்டவை. SCARC ஆல் ஒப்புதல் அளிக்கப்பட்ட 21 கடன்களின் மொத்தப் பெறுமதியில் இவை 30 சதவீதமானவை.

இவற்றின் நான்கு கடன்களின் மானியக் கூறு 5 – 10 சதவீதத்திற்கு இடைப்பட்டவை: இவற்றில் இரண்டு நெதர்லாந்தின் கடன் வழங்கும் நிறுவனங்களிடமும் ஒன்று ஸ்பெயின் மற்றும் இன்னொன்று சீனாவிடம் இருந்தும் பெறப்பட்டுள்ளன. சீன அபிவிருத்தி வங்கியிடம் இருந்து பெறப்பட்ட இரண்டு கடன்களின் மானியக் கூறு 5 சதவீத்திற்கும் குறைவாகும் (அட்டவணை 1 ஐப் பார்க்கவும்). இந்தக் கருத்திட்டங்கள் கோரப்படாத முன்மொழிவுகளாக பெறப்பட்டுள்ளதுடன் இவை போட்டி ஏல நடைமுறையிலிருந்து விலக்களிக்கப்பட்டு வழங்கப்பட்டமை காரணமாக மானியக்கூறு குறைவாக இருப்பது அதிக சிக்கலைத் தோற்றுவிக்கக்கூடியது. மேலே குறிப்பிடப்பட்டது போன்று, போட்டி இல்லாததன் காரணமாக செலவு அதிகரிப்பு 10 சதவீதத்தை விட அதிகரிக்குமானால் இந்தக் கடன்களைப் பெறுவதற்குப் பதிலாக வர்த்தக விகிதத்தில் கடனைப் பெற்று போட்டி ஏலத்திற்குச் செல்வது நாட்டிற்கு நன்மையாக இருந்திருக்கும். உதாரணமாக, கோரப்படாத முன்மொழிவாக கிடைக்கப்பெற்று SCARC ஆல் ஒப்புதல் அளிக்கப்பட்ட சீன அபிவிருத்தி வங்கியால் நிதியளிக்கப்படும் கருத்திட்டமானது ஆரம்ப மொத்த செலவு மதிப்பீட்டை விட 33.4% அதிகமான செலவிற்கு வழங்கப்பட்டதாக வெரிட்டே ரிசேர்ச் முன்னெடுத்த ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது. மேலும் இந்தக் கடனின் மானியக் கூறு 3.6% மட்டுமே ஆகும். இந்தத் திட்டமானது கம்பஹா, அத்தனகல, மினுவாங்கொட ஒன்றிணைந்த நீர் விநியோகத்

---

[6] *வெளிநாட்டுக் கடன்களின் சலுகையை மதிப்பிடுவது தொடர்பான மேலதிகத் தகவல்களுக்கு வெரிட்டே ரிசேர்ச்சின் முந்தைய வெளியீட்டைப் பார்க்கவும்: வெரிட்டே ரிசேர்ச், ‘உட்கட்டமைப்புகளுக்கு நிதியளித்தல்: சலுகைக் கடன்களின் சலுகையின்மை, 2020, பார்வையிட: https://www.Veritéresearch.org/publication/financing-infrastructure-the-non-concessionality-of-concessional-loans/ [இறுதியாக அணுகியது: 15 ஜூன் 2023].*

திட்டம் ஆகும். போட்டி ஏலத்தைக் கைவிடத் தீர்மானித்தால் மானியக் கூறுடன் ஒப்பிடும்போது திட்டத்தின் செலவு அதிகரிக்கும் என்பதை இது மறைமுகமாகக் குறிப்பிடுகிறது[7].


நான்கு அபிவிருத்தி அடைந்த நாடுகளின் கடன் வழங்கும் நிறுவனங்களால் நிதியளிக்கப்பட்ட எட்டு சலுகையற்ற கடன்கள் விசேட கட்டமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளான 3 ஆண்டு சலுகைக் காலம் மற்றும் 15 ஆண்டு முதிர்வு காலம் ஆகியவற்றைக் கூட பூர்த்தி செய்யவில்லை. சீன அபிவிருத்தி வங்கியின் 3 கடன்கள் SCARC இன் அளவுகோல்களைப் பூர்த்தி செய்தபோதும் (அட்டவணை 1 ஐப் பார்க்கவும்) அவற்றின் மானியக் கூறு மிகக் குறைவாகும் (அதாவது குறைந்த மட்ட சலுகை). இது விசேட கட்டமைப்பின் சலுகையை மதிப்பிடுவதற்கான தரநிலைகளிலுள்ள குறைபாடுகளைச் சுட்டிக்காட்டுகிறது.

அட்டவணை1: 21 கடன்களில் 11 இன் மானியக் கூறுகள் 35 சதவீதத்திற்கும் குறைவு

சிவப்பு நிறத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கடன்கள் SCARC இன் சலுகைக்கான அளவுகோல்களையும் பூர்த்தி செய்யத் தவறிவிட்டன (அதாவது 3 ஆண்டு சலுகைக் காலம் மற்றும் 15 ஆண்டு முதிர்வு காலம்).

[7] *வெரிட்டே ரிசேர்ச், 'சீனக் கடன்கள் மீதான மோகம்'*, 2022, *பார்வையிட*: https://www.veriteresearch.org/publication/the-lure-of-chinese-loans/. [*இறுதியாக அணுகியது*: 15 ஜூன் 2023]

| Host Country | Lending Institution | Grace Period (yrs) | Maturity (yrs) | Interest Rate |
|---|---|---|---|---|
| **Belgium** | KBC Bank of Belgium | 3.5 | 10 | 1.20% |
| **Belgium** | Fortis Bank NV/Fortis Banque SA | 3 | 12 | 0.80% |
| **Spain** | Banco Bilbao Vizcaya Argentaria S.A. | 1.9 | 10 | Euribor 6 months 2.25% |
| **Australia** | Export Finance & Insurance Corporation and HNB | 1.5 | 11 | Libor 6 months 1% |
| **Netherlands** | Co-op Centrale Raiffeisen-Boerenleenbank (Netherlands) | 3 | 13 | 4.65% |
| **Netherlands** | Co-op Centrale Raiffeisen-Boerenleenbank | 3 | 13 | 4.94% |
| **China** | China Development Bank | 3.2 | 15 | Libor 6 months 2.9% |
| **Spain** | Banco Bilbao Vizcaya Argentaria S.A. | 1 | 3 | Euribor 6 months 2.75% |



| | | | | |
|---|---|---|---|---|
| **Netherlands** | Co-op Centrale Raiffeisen-Boerenleenbank | 2 | 3 | 5% |
| **China** | China Development Bank | 4 | 15 | Libor 6 months 2.9% |
| **China** | China Development Bank | 3 | 15 | Libor 6 months 2.95% |

*மூலம்:*

*நிதி அமைச்சு, வெளி வளத் திணைக்களம் மற்றும் அரச நிதித் திணைக்களம் ஆகியவற்றிலிருந்து பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் வெரிட்டே ரிசர்ச் முன்னெடுத்த கணக்கீடுகள்*

விசேட கட்டமைப்பில் அறிமுகப்படுத்தப்பட்ட சலுகை மதிப்பீட்டு முறைகளின் குறைபாடுகளை இந்தக் கண்டுபிடிப்புகள் வெளிப்படுத்துகின்றன. எனினும் கோரப்படாத முன்மொழிவுகளின் மதிப்பீட்டு செயல்முறையை மேம்படுத்துவதே கட்டமைப்பை உருவாக்கியதன் முக்கிய நோக்கம் ஆகும். SCARC அளவுகோல்களைப் பூர்த்தி செய்யாத பிற நாடுகளின் கடன்களுடன் ஒப்பிடுகையில் சீன அபிவிருத்தி வங்கியின் மூன்று கடன்கள் குறைந்த மானியக் கூறுகளைக் கொண்டிருந்தாலும் விசேட கட்டமைப்பின் சலுகை அளவுகோல்களைப் பூர்த்திசெய்துள்ளன. எனினும் அவை கூடிய வட்டி வீதங்களை வசூலிக்கின்றன. பிற கடன்களுடன் ஒப்பிடுகையில் கூடுதல் முதிர்வு காலத்தை வழங்கியதன் நன்மையை இது இல்லாமல் செய்கிறது (அட்டவணை 1 ஐப் பார்க்கவும்). வட்டி வீதங்களைக் கவனத்தில் கொள்ளாமல் காலப்பகுதி எனும் அளவுகோலில் மட்டும் SCARC தங்கியிருப்பதால் சலுகைக் காலம் மற்றும் முதிர்வுக் காலத்தை எட்டினால் அவை கூடிய வட்டி மற்றும் சலுகையற்ற கடன்களாக இருந்தால் கூட அனுமதிக்கப்படுகின்றன. இதன் காரணமாக சீன அபிவிருத்தி வங்கியிடம் இருந்து பெறப்பட்ட கடன் போன்ற சலுகையற்ற கடன்கள் SCARC இன் மதிப்பீட்டு அளவுகோலை இலகுவாக எட்டிவிடுகின்றன.

# முடிவு

ஏற்றுமதி கொடுகடன்களை சாதகமான விதிமுறைகளில் பெற்றுக்கொள்வதற்காக கொள்முதல் செயல்முறையில் போட்டி ஏலத்தைத் தவிர்ப்பதற்காக SCARC தலைமையிலான விசேட கட்டமைப்பு வடிவமைக்கப்பட்டுள்ளது. போட்டி ஏலத்தைத் தவிர்த்ததன் மூலம் பெல்ஜியம், ஸ்பெயின், நெதர்லாந்து, பிரான்ஸ், ஆஸ்திரியா மற்றும் ஆஸ்திரேலியா என ஆறு அபிவிருத்தியடைந்த நாடுகள் மற்றும் சீனாவின் கடன் வழங்கும் நிறுவனங்களிடம் இருந்து SCARC கடன்களைப் பெற முடிந்துள்ளது என்பதை இந்த ஆய்வு வெளிப்படுத்துகிறது. எனினும் பெறுமதியைக் கருத்தில் கொள்ளும்போது மொத்தக் கடன் பெறுமதியில் 9% அபிவிருத்தி அடைந்த நாடுகளிடம் இருந்தும் 91% சீன கடன் வழங்கும் நிறுவனங்களிடம் இருந்தும் பெறப்பட்டுள்ளன.

SCARC பல்வேறு சந்தர்ப்பங்களில் இரண்டு காரணங்களால் சலுகைக் கடன்களைப் பெற முடியாதிருந்ததாக ஆய்வு கண்டறிந்துள்ளது. முதலாவது, சலுகை என்பதற்கான நிறுவப்பட்ட வரையறையை அது தாண்டிச் சென்றுள்ளது, விசேட கட்டமைப்பின் அளவுகோல்களைப் பூர்த்தி செய்யும் அதிகளவான வட்டி வீதத்தைக் கொண்ட சலுகையற்ற கடன்களுக்கு அது அனுமதியளித்துள்ளது. இரண்டாவதாக, மதிப்பீட்டுச் செயல்முறையில் SCARC அதன் வழிகாட்டுதல்களைப் பயன்படுத்தும்போது தேர்ந்தெடுத்துச் செயல்பட்டுள்ளது. இதன் விளைவாக அதன் அளவுகோல்களைக் கூட பூர்த்திசெய்யாத கடன்கள் மூலம் நிதியளிக்கப்பட்ட கருத்திட்டங்களுக்கு ஒப்புதல் அளித்துள்ளது. இவ்வாறு செய்ததன் மூலம் விசேட கட்டமைப்பில் குறிப்பிட்டுள்ள நோக்கங்களை தொடர்ச்சியாக எட்டத் தவறிவிட்டது: குறிப்பாக, மிகவும் கடுமையாக மதிப்பீட்டு செயல்முறையை நிறுவுதல் மற்றும் சாதகமான விதிமுறைகளில் கடன்களைப் பெற்றுக்கொள்ள உதவுதல்.

பொறுப்பற்ற பொதுத் துறை கடன்களால் நாடு கடன் பிரச்சினையில் சிக்கித் தவிக்கும் நிலையில், மீண்டும் இது போன்று நடக்காமல் இருக்க சிறந்த நிர்வாகக் கட்டமைப்பை உருவாக்கும் செயல்முறையில் ஈடுபட்டுள்ள வேளையில், பொது நிதியை முறைகேடாக நிர்வகிப்பதற்கு இடமளிக்கும் இவ்வாறான கொள்முதல் தொடர்பான பிரச்சினைகளைச் சரிசெய்வது முக்கியம் ஆகும்.

2006 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட கொள்முதல் வழிகாட்டுதல்களால் நிர்வகிக்கப்படும் ஏற்கனவேயுள்ள கொள்முதல் கட்டமைப்பில் இரண்டு குறைபாடுகள் உள்ளதை இந்த ஆய்வின் கண்டுபிடிப்புகள் சுட்டிக்காட்டுகின்றன. இவை உடனடியாக சரிசெய்யப்பட வேண்டும். முதலாவதாக, பாராளுமன்றத்தின் மேற்பார்வையின்றி போட்டி ஏல செயல்முறையிலிருந்து விலகி கொள்முதலை மேற்கொள்ள அனுமதியளிக்கும் விசேட கட்டமைப்புகளை அறிமுகப்படுத்துவதன் மூலம் தற்போதுள்ள கொள்முதல் வழிகாட்டுதல்களில் மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய அமைச்சரவையின் திறன். 2006 ஆம் ஆண்டின் கொள்முதல் வழிகாட்டுதல்களில் உள்ளடக்கப்பட்டுள்ள போட்டித்தன்மை எனும் கொள்கையை அமைச்சரவை குறைத்து மதிப்பிட இது

வழிகாட்டுகிறது. இரண்டாவது, அமைச்சரவையின் ஒப்புதலுடன் உருவாக்கப்பட்ட SCARC போன்ற தற்காலிக குழுக்கள் எந்தவித விசாரணைக்கும் உட்படுத்தப்படாமல் அல்லது எந்த விளைவுகளையும் சந்திக்காமல் குறைந்தபட்ச அளவுகோலைக் கூட பூர்த்திசெய்யாத கருத்திட்டங்களுக்கு அனுமதியளிக்கும் திறன். எதிர்காலத்தில் இந்தக் குறைபாடுகளை அரசாங்கமும் கொள்கை வகுப்பாளர்களும் நிவர்த்தி செய்வது அவசியமாகும். கொள்முதலில் துஷ்பிரயோகங்கள் மற்றும் தவறான பயன்பாட்டிற்கான வாய்ப்புக்களை இல்லாமல் செய்வதன் மூலம் அபிவிருத்தி கருத்திட்டங்களில் செலவிடப்படும் பொது மக்களின் நிதிக்கு நாடு சிறந்த பலனை பெறுவதை உறுதிசெய்ய உதவும்.

# பின்னிணைப்பு

## பின்னிணைப்பு 1: SCARC ஆல் அனுமதியளிக்கப்பட்ட கருத்திட்டங்களின் பட்டியல்

கீழே குறிப்பிடப்பட்டுள்ள பொதுத் துறை நிதியுதவியுடன் கூடிய 18 அபிவிருத்தித் திட்டங்கள் ஆய்வுக்காக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

| இல. | கருத்திட்டத்தின் பெயர் |
|---|---|
| 1 | அரசாங்கத்தின் உதவியின் கீழ் தேவை நிலவும் வைத்தியசாலைகளில் மருத்துவ கழிவு முகாமைத்துவ அமைப்பு |
| 2 | அம்பாந்தோட்டை துறைமுகத்திலிருந்து மத்தள விமானநிலையம் வரை அதிவேக நெடுஞ்சாலை நிர்மாணம் |
| 3 | மொரகஹகந்த நீர்த்தேக்கத்தின் நீர்த்தடுப்பு கட்டுமானம் |
| 4 | பெலியத்தை முதல் வெட்டிய வரை தெற்கு அதிவேக நெடுஞ்சாலை நீட்டிப்பு |
| 5 | மாத்தறை முதல் பெலியத்தை வரை தெற்கு அதிவேக நெடுஞ்சாலை நீட்டிப்பு |
| 6 | கம்பஹா, அத்தனகல, மினுவாங்கொட ஒன்றிணைந்த நீர் வழங்கல் திட்டம் |
| 7 | பாரிய மாத்தளை நீர் வழங்கல் திட்டம் |
| 8 | கிரம கட்டுவன ஒருங்கிணைந்த நீர்வழங்கல் கருத்திட்டம் |
| 9 | கொலன்ன மற்றும் பலாங்கொடை நீர் வழங்கல் திட்டம் – கட்டம் II விநியோக வலையமைப்புகள் நீட்டிப்பு – பகுதி II |
| 10 | சீன அபிவிருத்தியிடம் இருந்து ஐ.அ.டொ 500 மில்லியன் கடன் வசதி - "CATIC" |
| 11 | மகியங்கனை நீர் வழங்கல் திட்டம் |
| 12 | அம்பாந்தோட்டை அபிவிருத்தி கருத்திட்டத்தில் மாத்தறை – அம்பாந்தோட்டை நெடுஞ்சாலை மற்றும் ஏனைய நான்கு வீதி பிரிவுகள் |

| | |
|---|---|
| 13 | மொனராகலை மற்றும் புத்தல ஒன்றிணைந்த நீர் வழங்கல் திட்டம் |
| 14 | வடக்கு மற்றும் கிழக்கிற்கு கூடுதல் கவனம் செலுத்தும் நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய இலங்கையின் தேசிய இரத்தமாற்று சேவை |
| 15 | கடவத்தை முதல் கெரவலப்பிடிய வரை புறச்சுற்றுவட்ட வீதி |
| 16 | பாலம் இல.38/3- பெலியாகொடை – புத்தளம் வீதி (கொச்சிக்கடை பாலம்) மீள்நிர்மாணம் |
| 17 | கதிர்காமம் புனித நகரத்திற்கான கழிவுநீர் உட்கட்டமைப்பு |
| 18 | வியாங்கொடை புகையிரத கடவை மேம்பாலம் |
| 19 | அம்பாந்தோட்டைக்கு கழிவு நீர் உட்கட்டமைப்பு |
| 20 | இலங்கையில் 196 கிராமப்புறப் பாலங்கள் |
| 21 | இரத்தினபுரி நீர் வழங்கல் திட்டத்தின் அபிவிருத்தி – கட்டம் II |
| 22 | திருகோணமலையில் புறச்சுற்றுவட்ட வீதியை நிர்மாணிப்பதற்காக ஹுனான் வீதி மற்றும் பாலம் நிர்மாணக் கூட்டுத்தாபனம் |
| 23 | காத்தான்குடி பிரிவிற்கான கழிவுநீர் அகற்றும் திட்டம் |
| 24 | தேசிய அவசரகால பதில் திட்டம் - III |
| 25 | மொரட்டுவை பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப நிறுவகத்தின் இட மாற்றம் மற்றும் அபிவிருத்தி |
| 26 | 141 பாலங்களுக்கான விநியோகம் மற்றும் நிர்மாணம் – மாபே பிரிட்ஜ் லிமிடெட், ஐக்கிய இராச்சியம் |
| 27 | எட்மன்டன் வீதி, கொழும்பு 05 இல் வீட்டு அலகுகளை நிர்மாணித்தல் |
| 28 | யக்கல, வெரல்லவத்தையில் வீடமைப்பு அபிவிருத்தித் திட்டத்தை நிர்மாணித்தல் |

| | |
|---|---|
| 29 | ஹோமாகம, மவுண்ட் கிளிபோர்ட்டில் வீடமைப்பு அபிவிருத்தி திட்டத்தை நிர்மாணித்தல் |
| 30 | இந்தியாவின் டாடாவால் கொழும்பு 02 கொம்பனித் தெரு வீடமைப்பு அபிவிருத்தி திட்டத்தை அமைத்தல் |
| 31 | யக்கலை, சியன உயனவில் 12 வீட்டு அலகுகள் நிர்மாணம் |
| 32 | யல்தர – ஹோமாகமவில் 135 குறைந்த செலவினத்தைக் கொண் வீட்டு அலகுகளை நிர்மாணித்தல் |
| 33 | கண்டி, இஸ்ககரவட்டம் பல்லேகலையில் வீட்டு அபிவிருத்தி திட்ட நிர்மாணம் |
| 34 | கண்டி, ஹந்தான வத்தையில் 103 வீட்டு அலகுகள் நிர்மாணம் |
| 35 | பாமன்கடை கவிரத்ன பிளேஸில் வீடமைப்புத் திட்ட அபிவிருத்தி மற்றும் நிர்மாணம் |
| 36 | கண்டி, பல்லேகலை, களுகலாவில் வர்த்தகப் பகுதி மற்றும் வீடமைப்புத் திட்ட நிர்மாணம் |
| 37 | இரத்தினபுரி, கல்கடுவ வத்தையில் 130 வீட்டு அலகுகள் நிர்மாணம் |
| 38 | கண்டி, ஹந்தானையில் 23 வீட்டு அலகுகள் நிர்மாணம் (கட்டம் 3) |
| 39 | கண்டி, ஹந்தானையில் 19 வீட்டு அலகுகள் நிர்மாணம் (கட்டம் 4) |
| 40 | கொழும்பு நகரில் முதன்மையான முதலீடு (ஷாங்கிரி லா ஹோட்டல்) |
| 41 | கொழும்பில் (ஜோன் கீல்ஸ்) பன்னாட்டு கலப்பு அபிவிருத்தி திட்டத்திற்கு காணியைக் கொள்வனவு செய்வதற்கான சலுகை |
| 42 | 'கிளெனி'' வீதி அபிவிருத்தி திட்டம் – ஒருங்கிணைந்த பல பயன்பாட்டு கலப்பு அபிவிருத்தி திட்டம் |
| 43 | கலப்பு அபிவிருத்தித் திட்டம் - ''CCC அபிவிருத்தி கருத்திட்டம்'' |

| | |
|---|---|
| 44 | 400 அறைகளைக் கொண்ட நட்சத்திர ஹோட்டல் மற்றும் அடுக்குமாடி குடியிருப்புகள் (ITCL, இந்தியா) |
| 45 | "கொழும்பு 01 ட்ரான்ஸ்வேர்க் ஸ்கொயர் காணியில் கலப்பு அபிவிருத்தி திட்டம் (தி ஒன் ட்ரான்ஸ்வேர்க்ஸ் ஸ்கொயர் (பிரைவட்) லிமிடெட்)” |
| 46 | கொழும்பு துறைமுக நகரம் – கட்டம் 1 |
| 47 | யால, பலதுபானவில் சுற்றுச்சூழலுக்கு தீங்களிக்காத சொகுசு வில்லா ஹோட்டல்கள் |
| 48 | கொழும்பில் ஒருங்கிணைந்த ஓய்வு விடுதியை அமைத்தல் |
| 49 | மத்தள சர்வதேச விமான நிலையம்* |

* அரச நிதி திணைக்களத்திடம் இருந்து வெரிட்டே ரிசேர்ச்சால் பெறப்பட்ட பட்டியலின் பிரகாரம் 49 கருத்திட்டங்களுக்கு SCARC ஒப்புதல் அளித்துள்ளது. எனினும் SCARC ஆல் ஒப்புதல் அளிக்கப்பட்ட கருத்திட்டங்களின் பட்டியலில் உள்ள மத்தள சர்வதேச விமான நிலையம் இந்த ஆய்விலிருந்து விலக்கப்பட்டுள்ளது. ஏனெனில் மத்தள விமான நிலைய நிர்மாணத்திற்கான வர்த்தக ஒப்பந்தம் சீன துறைமுக என்ஜினியரிங் நிறுவனத்துடன் நவம்பர் 27, 2009 ஆம் ஆண்டு கைச்சாத்திடப்பட்டது. இந்தத் திட்டத்திற்கு நிதியளிப்பதற்கான கடன் ஒப்பந்தம் சீன ஏற்றுமதி மற்றும் இறக்குமதி வங்கியுடன் மார்ச் 5, 2010 ஆம் ஆண்டில் கைச்சாத்திடப்பட்டது. இந்த நிகழ்வுகள் ஆகஸ்ட் 2010 ஆம் ஆண்டிற்கு முன்னதாக நிகழ்ந்துள்ளன (அதாவது, அரச நிதி சுற்றறிக்கை இல. 444 இன் ஊடாக SCARC உருவாக்கப்பட்ட மாதம்). எனவே இந்தத் திட்டம் இந்த ஆய்விலிருந்து விலக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்திற்கான முன்மொழிவுக்கு SCARC ஒப்புதல் அளிக்கவில்லை என்பது தெளிவாகத் தெரிகிறது. SCARC ஒப்புதல் திட்டத்தின் எந்த அம்சங்களைக் குறிப்பிடுகிறது என்பதில் தெளிவில்லை.

*மூலம்: அரச நிதித் திணைக்களத்திடம் பெப்ரவரி 14, 2022ல் தகவல் அறியும் உரிமைக் கோரிக்கை தாக்கல் செய்யப்பட்டது.*